<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 117/2020 | சாட்சி | வா.சா.1 |
| பெயர் | இந்திரஜித் | நாள் | 01.02.2024 |
| தகப்பனார் பெயர் | பெருமாள் கவுண்டர் | | |

<u>பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:–</u>

1) இவ்வழக்கின் 1ம் பிரதிவாதி எனக்கெதிராகவும், என் தாயார் தங்கம்மாள் மற்றும் என் சகோதரர் பொன்வேல் ஆகியோர்களுக்கு எதிராக மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.38/2020 என்ற வழக்கை விளம்புகை, செயலுத்துக்கட்டளை, சுவாதீனம், நிரந்தர உறுத்துக்கட்டளை ஆகிய பரிகாரங்கள் கோரி தாக்கல் செய்துள்ளார் என்றால், சரிதான்.

2) மேற்படி வழக்கில் தரப்பினர்களது வாத, பிரதிவாதங்கள் கேட்கப்பட்டு, மீண்டும் வழக்கு திறக்கப்பட்டு எங்கள் தரப்பு வாதத்திற்காக மீண்டும் வாய்தா போடப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி வழக்கில் 1ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குரையை தற்போது இவ்வழக்கில் வா.சா.ஆ.4 ஆக நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான்.

3) மேற்படி அ.வ.எண்.38/2020 என்ற வழக்கில் ஆணையாளர் நியமிக்கப்பட்டு, தாவா சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால், சரிதான். மேற்படி ஆணையாளர் அறிக்கைக்கு எங்கள் தரப்பில் அ.வ.எண்.38/2020 என்ற வழக்கில் ஆட்சேபனை எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி வழக்கில் என் தாயாரும், என் சகோதரரும் ஆஜராகவில்லை என்றால், சரிதான். மேற்படி வழக்கிலுள்ள சொத்து எனக்கு பிரிந்து என்பதால், மேற்படி வழக்கில் அவர்கள் ஆஜராகவில்லை. மேற்படி சொத்து எனக்கு பிரிந்தது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். மேற்படி சொத்து எனக்கு வாய்மொழியாக பிரிந்தது.

4) அ.வ.எண்.38/2020 என்ற வழக்கில் உள்ள சொத்தும், தற்போது இந்த வழக்கிலுள்ள சொத்தும் ஒரே சொத்து என்றால், சரிதான். மேற்படி வழக்கிலும், தற்போது இவ்வழக்கிலும் உள்ள இரு தரப்பினர்களும் ஒரே நபர்கள் தான் என்றால், சரிதான். என் வழக்கு படி 1995ம் வருடத்திலேயே தாவா சொத்துக்கள் எனக்கு வாய்மொழி பாகம்மூலம் பாத்தியப்பட்டதாக நான் சொல்கிறேன் என்றால், சரிதான்.

5) அவ்வாறு உள்ள நிலையில் 1995ம் வருடத்திற்கு பிறகு தற்போது வரை என் பெயரில் தனியாக, தனிபட்டா பெற முயற்சி செய்யவில்லை என்றால், சரிதான். ஆனால் சொத்திற்கான பட்டா என் பெயரிலும், என் சகோதரர் பெயரிலும் கூட்டாக உள்ளது. தாவா சொத்தை பொறுத்து என் பெயரிலும், என் சகோதரர் பெயரிலும் கூட்டு பட்டா உள்ள நிலையில், இவ்வழக்கை நான் மட்டும் தனியாக தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால், சரியல்ல. 1995ம் வருடத்திலிருந்து நான் தனிப்பட்ட முறையில் அனுபவித்து வருவதால் எனக்கு உரிமை உள்ளது.

6) சர்வே எண்.158/1B ல் உள்ள சொத்துதான் தற்போது இவ்வழக்கில் பிரச்சனை உள்ள சொத்து என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 என் தாயார் பெயரிலுள்ள கிரயப்பத்திரம் என்றால், சரிதான். என் தாயார் மேற்படி கிரயப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களை அலமேலு வகையறா என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார் என்றால், சரிதான். வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின் படி என் தாயார் சர்வே எண்.158/1ல் 1.57–1/2 ஏக்கர் நிலத்தை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

7) சர்வே எண்.158/1ல் ராமாயம்மாள் பாக நிலத்திற்கு கிழக்கு என மேற்படி வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், சரிதான். ஆனால் மேற்படி சர்வே எண்.158/1ல் 1.57–1/2 ஏக்கர் நிலம் போக என் தாயாருக்கு மேற்படி அலமேலு வகையறா 0.21–1/2 சென்ட் நிலத்தை தனியாக உறுதிமொழி பத்திரம் மூலம் சுவாதீனம் அளித்துள்ளனர். அவ்வாறு நான் சொல்வது போல் உறுதி மொழி பத்திரம் எதையும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால், சார்பு நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால், இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

8) என் வழக்குரையிலோ, முதல் விசாரணை சாட்சியத்திலோ அவ்வாறு உறுதி மொழி பத்திரம் குறித்து எதையும் நான் சொல்லவில்லை என்றால், சரிதான். என் தாயார் கிரயம் பெற்றுள்ள சொத்து மேற்படி அலமேலுவிற்கு 25.02.1971ம் தேதிய பாக பத்திரத்தின் படி பாத்தியப்பட்டது என்றால், சரிதான். மேற்படி அலமேலுவின் பெயரிலுள்ள மேற்படி பாக பத்திரத்தை மேட்டூர் சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்றுவரும் வழக்கிலோ, அல்லது தற்போது இவ்வழக்கிலோ நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

9) மேற்படி 1971ம் வருட பாகபிரிவினை பத்திரத்தின் படியே மேற்படி அலமேலுவிற்கு சர்வே எண்.158/1ல் 1.57–1/2 ஏக்கர் நிலம் மட்டும்தான் பாத்தியம் என்றாலும், மேற்படி பத்திரத்தை இவ்வழக்கில் தாக்கல் செய்தால், உண்மை தெரிந்துவிடும் என்பதால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மேற்படி அலமேலுவிற்கு சர்வே எண்.158/1ல் 1.57–1/2 ஏக்கர் நிலம் போக மீதமுள்ள 1.57–1/2 ஏக்கர் நிலம் அவரது தாயார் ராமாயம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்றாலும், மேற்படி ராமாயம்மாள் தனது பாகத்தை 29.08.1981ம் தேதியில் 1ம் பிரதிவாதிக்கு தான செட்டில்மெண்ட் அளித்துவிட்டார் என்றாலும், சரிதான். ஆனால் 1971ல் மேற்படி அலமேலுவிற்கும், அவரது தாயாருக்கும் சர்வே எண்.158/1ல் உள்ள 3.15 ஏக்கர் நிலத்தில் சரிபாதியாக தலா 1.57–1/2 ஏக்கர் பிரிந்தது. பின்னிட்டு 1973ல் மேற்படி அலமேலு தன் பாகத்தை என் தாயாருக்கு கிரயம் கொடுக்கும்போது மேற்படி அலமேலுவின் பாகம் தாழ்வாக உள்ளதாலும், அதில் உயர் மின்னழுத்த கம்பிப்பாதை அமைந்துள்ளதாலும், அதனை ஈடு செய்யும் வகையில், 0.21–1/2 சென்ட் நிலத்தை சேர்த்து அலமேலுவிற்கு அவரது தாயார் அளித்துவிட்டார். மேற்படி 0.21–1/2 சென்ட் நிலத்தை சேர்த்து தான் அலமேலு என் தாயாருக்கு சுவாதீனம் அளித்துள்ளார்.

10) 1973ம் வருடத்தில் என் தாயார் மேற்படி அலமேலுவிடமிருந்து வா.சா.ஆ.1 கிரய ஆவணத்தின்படி சர்வே எண்.158/1ல் கிரயம் பெற்றுள்ள 1.57–1/2 ஏக்கர் நிலத்தை தவிர வேறு எந்த நிலத்தையும் உரிமைகோர எனக்கு அருகதை இல்லை என்றால்

சரியல்ல. எனக்கு மேற்படி சர்வே எண்ணில் 1.79 ஏக்கல் நிலத்திற்கு உரிமை உள்ளது. இவ்வழக்கில் என் தரப்பில் வா.சா.ஆ.6 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ள மாதிரி வரைபடத்தில் அவ்வாறு உயர் மின்னழுத்த கம்பிபாதை செல்வதாக குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். ஆனால் தற்போதும் நிலையில் உள்ளது.

11) சர்வே எண்.158/1B ல் உள்ள சொத்திற்கு மேற்கில்தான் பிரதிவாதிகளின் சொத்து உள்ளது என்றால், சரிதான். மேற்படி சர்வே எண்.158/1B ல் உள்ள சொத்திற்கு தெற்கு புறத்திலும் எங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்து உள்ளது என்றால், சரிதான். சர்வே எண்.158/1 ல் உள்ள சொத்தை என் தாயார் கிரயம் பெற்றதற்கு பின்னிட்டு தான், தென்வடலாக செல்லும் அரசாங்க தார்ரோடு அமைக்கப்பட்டது என்றால், சரிதான். மேற்படி தார்ரோடு எனக்கு பாத்தியப்பட்ட மேற்படி 1.79 ஏக்கர் நிலத்தின் ஒரு பகுதியில் அமைக்கப்பட்டுள்ளது.

12) மேற்படி தார் ரோட்டிற்கு அரசாங்கம் சர்வே எண்.158/1 ல் நிலத்தை கையகப்படுத்திய பின்புதான் பிரதிவாதிகளுக்கு என் நிலத்திற்கு மேற்கு பக்கம் பாத்தியப்பட்டுள்ள 1.57–1/2 ஏக்கர் நிலத்தில் 0.21–1/2 சென்ட் நிலத்தை சேர்த்து நாங்கள் எங்கள் பெயரில் பட்டா செய்து கொண்டு பிரதிவாதிகளுக்கு இடையூறு செய்கிறோம் என்றால், சரியல்ல. 1973 ம் வருடத்திலிருந்தே நான் 1.79 ஏக்கர் நிலத்தை அனுபவித்து வருகிறேன். 1980 ம் வருடத்தில் தான் மண்ரோடு அமைத்தார்கள். அதனால், மேற்படி மண்ரோட்டிற்காக நிலத்தை எடுத்ததாக நான் பிரதிவாதிகள் நிலத்தை சேர்த்து பட்டா பெற்றதாக சொல்வது தவறானது.

13) சர்வே எண்.158/1B ல் உள்ள என்னுடைய பாகத்தில், 1 ம் பிரதிவாதியின் தகப்பனாரின் சமாதி அமைந்துள்ளது என்றால், சரிதான். அது ரோட்டை ஒட்டியவாறே அமைந்துள்ளது. வா.சா.ஆ.6 வரைபடத்தின்படியே பிரௌன் நிறத்தில் காட்டப்பட்டுள்ள சின்னகேட்டின் வழியாக சென்றால்தான் மேற்படி சமாதிக்கு செல்ல இயலும் என்றால்,

சரிதான். மேற்படி தென்வடல் தார் சாலையை ஒட்டி கிழபுறம் உள்ள நிலமும் எங்களுடையது தான் என்றால், சரிதான்.

(பிரதிவாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மேட்டூர்.